1975 ஏப்ரல் 15]

திரு. என். கே. பழனிசாமி : சார், நம் மாநிலத்திலே யிருந்துதான் இந்தியாவிலே அதிகமாகத் தோல் வெளிநாட்டிற்கு அனுப்பப்படுகிறது. அங்கே பதனிட்டு நம் நாட்டிற்குத் திருப்பிக் கொண்டு வருகிருர்கள். இந்த நிலைமை போக வேண்டுமானுல் நாமே மாடர்ன் மெதட்-லே இங்கிருந்து வெளிநாட்டிற்கு அனுப்பும் தோல்களை இங்கேயே பதனிட்டுச் செய்வதற்குச் சர்க்கார் விரிவான திட்டத்திற்கு ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே சர்விஸ் சென்டர்களை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு இருக்கிறது. அந்த சர்வீஸ் செண்டர்களை பல்லாவரம், இராணிப் பேட்டை, ஆம்பூர், வாணியம்பாடி, திண்டுக்கல், பேரணும்பட்டு, ஈரோடு போன்ற இடங்களில் அமைக்கலாம் என்ற பரிசீலனை இருக்கிறது. இப்படிப்பட்ட சர்விஸ் செண்டர்களை அமைப்பதன் மூலம் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு உதவி செய்ய முடியும் என்று அரசு கருதுகிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்தத் தோல்பொருள் வேலை நிறைவு நிலையங்களை இன்னும் நம் மாநிலத்தில் ஆரம்பிக்காத நிலையிலே மத்திய அரசு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தோல் பொருள்களை முடிந்த நிலையிலே, அதாவது ஃபினிஷ்ட் அளவிலே இருக்க வேண்டுமென்ற கட்டுப்பாட்டை நிர்ணயித்திருப்பதன் மூலம் இந்தத் தோல் தொழிலில் சிக்கலான நிலைமை ஏற்பட்டிருக்கிறதே, அதைப்போக்க தனியார்கள் தொடங்கவிருக்கும் இந்த வேலைநிறைவு நிலையங்களுக்கு அரசு மிகுந்த உதவி செய்வதோடு இதற்கு முன்னுரிமை தந்து நம் மாநிலத்திலே அதிகமான தோல்பொருள் வேலைநிறைவு நிலையங்களை உடனடியாக உண்டாக்குவதற்கான வழிவகைகளைக் காணுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம்முடைய மாநிலத்திலே 'லெதர் டெவலெப்மென்ட் கார்ப்பரேஷன்' அமைக்க குறிப்பு இருக்கிறது. அந்த கார்ப்பரேஷன் மூலம் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையிலே வாய்ப்பு உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பட்டு உற்பத்திப் பயிற்சிப் பள்ளி.

*671 வினு—திரு. எம். முத்தையா : மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தருமபுரி மாவட்டம், ஒசூரில் பட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்கான பயிற்சிப் பள்ளி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அப்பள்ளியில் இதுவரை எத்தனை மாணவர்கள் பயிற்சி பெற்ருர்கள் ?

(உ) அதில் எத்தனை பேர் தேர்ச்சி பெற்ருர்கள் ?

(எ) தேர்ச்சி பெற்ற மாணவர்களுள் எத்தனை பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம். தர்மபுரி மாவட்டம் ஓசூரில் பட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்கான பயிற்சிப் பள்ளி 1973 ஆம் ஆண்டு துவங்கியது. பட்டதாரிகளுக்கும் பட்டதாரி அல்லாதவர்களுக்கும் பட்டுத் தொழில் சம்பந்தமாக பயிற்சி அளிக்கப்பட்டதும் அந்தப் பள்ளி 1974 ஆம் ஆண்டு முடிவில் மூடப்பட்டு விட்டது.

(இ) 25 பட்டதாரிகள் ; 50 பட்டதாரி அல்லாதவர்கள்.

(உ) நான்கு பட்டதாரிகள் பயிற்சியின் நடுவே நின்று விட்டார்கள். மீதம் உள்ள 71 பேர்களும் தேர்ச்சி பெற்ருர்கள்.

(எ) 15 பட்டதாரி அல்லாதவர்களுக்கு வேலை கொடுக்கும் உத்திரவு இடப்பட்டுள்ளது.

Cocoon market in Coimbatore.

*672 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to open a cocoon market near Palladam area in the State ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நடப்பு ஆண்டில் கோயம்பத்தூர் ஜில்லாவில் பட்டுப்புழு விற்பனை வசதி செய்து கொடுக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தொழில் வணிகத் துறை இயக்குநர் இதை கோவை மாவட்டத்தில் அமைக்க ஏற்பாடு செய்து வருகிறார்.

திரு. என். கே. பழனிசாமி : சார், சாதாரணமாக அதிகப் பலன் தருகின்ற, 30, 40 மடங்கு விளைச்சல் உண்டாகின்ற அம்மாதிரி இருக்கும் புழுக்களைக் கொடுக்கும் முறையில் பல்லடம் ஏரியாவில் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.